# 24 இலங்கை சைவசமய நூல்கள்

இலங்கை சைவப் பெரியோர்களால் காலத்துக்கு காலம் சைவசமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளனர். அவை தலங்களின் மகிமை கூறுபனவாகவும் விரதங்களின் பயன்களை விபரிப்பனவாகவும் அமைகின்றன.

**பிள்ளையார் கதை**

**அ.நூலாசிரியர்**

விரதங்களின் மகிமை பற்றிக் கூறும் பிள்ளையார் கதை ஒல்லாந்தர் காலப்பகுதியில் எழுந்த நூலாகும். காசியிலிருந்து சுன்னாகத்திற்கு வந்து குடியேறிய வேதியராகிய அரங்கநாதஐயர் அவர்களது புதல்வராகிய வரத பண்டிதர்(1656-1718) என்பவரால் இயற்றப்பட்டதாகும். இது 744 அடிகளையுடையதாகவும் ஆசிரியப்பாவினால் பாடப் பட்டதாகவும் அமைகின்றது. அத்தோடு இந்நூல் பாராயணமரபைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. சுன்னாகம் வரதபண்டிதர் மேலும் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் ஆகிய விரத நூல்களையும் குருநாதசுவாமி பிள்ளைவிடு தூது என்னும் பக்திப் பிரபந்தத்தையும், அமுதாகரம் என்னும் மருத்துவ நூலையும் வெளியிட்டுள்ளார்.




**ஆ.நூலின் தோற்றத்துக்கான காரணங்கள்**

போர்த்துக்கேயர் காலத்தில் வைசமயத்தவர்கள் சமய அனுட்டானங்களையும், விரதமுறைகளையும் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற சுதந்திர நிலை காணப்படவில்லை. அதனால் நாளடைவில் அவற்றைக் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறைகளும் அருகிவரத் தொடங்கின. ஒல்லாந்தர் காலத்தில் மீண்டும் சமயச் சுதந்திரம் காணப்பட்டபோது சைவசமய விரதங்களை அனுட்டிக்க ஆரம்பித்தனர். அப்போது அவற்றை அனுட்டிப்பதில் பலரிடத்தில் வேறுபாடு காணப்பட்டது. சைவ விரதங்களை இவ்வாறுதான் கடைப்பிடிக்கவேண்டும் என வலியுத்திக் கூறவேண்டிய தேவை ஏற்பட்டது. அதனை உணர்ந்த சுன்னாகம் வரதபண்டிதர் பிள்ளையார் கதையை எழுதினார். கார்த்திகை மாதத்து அபரபட்ச பிரதமை முதல் மார்கழி மாதத்து பூர்வபட்ச சட்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கும் விரதம் விநாயகர் சஷ்டி ஆகும். இக்காலப்பகுதியில் இந்நூல் படித்து பாராயணம் செய்யப்பட்டமையால் இந்நூலின் பெயரைக் கொண்டே இவ்விரதம் பிள்ளையார் கதை அல்லது பிள்ளையார் பெருங்கதை என அழைக்கப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெறலாயிற்று.

**இ.நூலின் அமைப்பு**

பிள்ளையார் கதை பின்வரும் பொருள் மரபினையுடையதாக அமைந்து செல்கின்றது.

1. காப்புச் செய்யுள் 3. அதிகாரம்
2. விநாயகர் துதி 4. நூல்
5. போற்றித் திருவகவல் 6.வருக்கக்கோவை
7. தத்துவ ஞானத் திருவகவல் 8. நூற்பயன்

என்பன அவையாகும்.

இதன் காப்புச் செய்யுளில் இக்கதைக்கு விநாயகப் பெருமான் துணை செய்ய வேண்டும் என வரதபண்டிதர் வேண்டியுள்ளார்.

**ஈ.நூல் கூறும் விடயம்**

பிள்ளையார் கதையில் பல கிளைக் கதைகள் காணப்படுகின்றன. உமை பிறந்த கதை, உமை சிவன் திருமணம், பிள்ளையார் பிறப்பு, அற்புதம், பிள்ளையார் கஜமுகாசுரனை அழித்து அவனை மூஷிகவாகனமாக்கிய கதை, வல்லவையை திருமணம் செய்தமை,சண்முகன் பிறந்து சூரனை அழித்தகதை, திருமால் குருட்டு பாம்புருவான கதை,ஆவணிச் சதுர்த்தி விரதச்சிறப்பு,விநாயகர் சஷ்டி விரதமும் அதனை அனுட்டிக்கும் முறைகள் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

விநாயகர் சஷ்டி விரதம் அனுட்டித்தவர்கள் பெற்ற பயன்களும் இக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவன் முப்புரங்களை எரித்தமை,உருத்திரன் விருத்திராசுரனை வென்றமை,அகலிகை கணவனை அடைந்தமை, தமயந்தி - நளனை அடைந்தமை,இராமன் சீதையை அடைந்தமை,பகீரதன் கங்கா நதியை வையத்துக்கு அழைத்தமை, அட்டதேவதைகள் அட்டயோகம், அமிர்தம் என்பவற்றைப் பெற்றமை,தருமனும் சகோதரர்களும் இழந்த அரசைப் பெற்றமை,வச்சிரமாலி மன்னன் உடம்பில் ஏற்பட்ட கடும்பிணி நீங்கி மன்னனாகி பின்னர் திலோத்தமையை மணம்புரிந்தமை,என்றவாறு பலர் பெற்ற பயன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் இதில் இலக்கண சுந்தரியின் கதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. விக்ரமாதித்தனின் மனைவி இலக்கண சுந்தரி இவ்விரதத்தை அனுட்டித்து இடையில் கைவிட்டாள். கட்டிய காப்பை அறுத்து காய்ந்த கொவ்வைச் செடியில் போட்டாள். அச்செடி துளிர் விட்டு படர்வதைக் கண்ட ஒருத்தி அக்காப்பினை எடுத்துக் கட்டினாள், அவளுக்கு இரட்டிப்பு அருள் கிடைக்கப் பெற்றது.பின்னர் விக்கரமாதித்தனின் கனவில் பிள்ளையார் தோன்றி கூறியதற்கமைய மன்னன் இலக்கண சுந்தரியை புறந்தள்ளி வைத்தான்.



இலக்கண சுந்தரி

அதனால் அவள் பல இன்னல்களுக்கு ஆளானாள். அவள் வணிகன் வீட்டுக்குச் சென்றதும் அவனிடமிருந்த முத்துக்கள் கல்லாகின, உழவன் வீட்டுக்குச் சென்றதும் வளர்பயிர்கள் அழிந்தன, குயவன் வீட்டுக்குச் சென்றதும் குயக்கலங்கள் உடைந்தன. மாலை கட்டுபவன் வீட்டுக்குச்

சென்றதும் மாலைகள் பாம்பாயின, அவள் ஔவையாரின் வீட்டுக்குச் சென்றதும் ஔவையாரைக் கண்டவர்கள் தூற்றினர், கல் எறிந்தனர், தள்ளினர், கைகளால் குத்தினர்,பழித்தனர் பின்னர் ஔவையார் அவளை விசாரித்து யாரென அறிந்து கொண்டார். அவளை விநாயகர் நோன்பிருக்க(விநாயகர் சஷ்டி விரதத்தை அனுட்டிக்க) செய்தார்.

இருபத்தொரு இழைகள் கொண்ட காப்புக்கட்டி படையல் படைத்து ஔவையார் பிள்ளையார் கதையினைப்படித்தார். இலக்கண சுந்தரி அதனைக் கேட்டு முறைப்படி விரதமிருந்தாள். அவ்வாறு அவள் விரதமிருந்தமையால் ஒரு பணியாரமும் சிறிதளவு நீருங் கொண்டு அரசன், அவனது படைகள், குதிரை, யானைகளுக்குக் கொடுத்தும் அவை முடிவடையாது இருந்தன. இத்தகைய அதிசயத்தைக் கேள்விப்பட்ட அவளது கணவனாகிய விக்கிரமாதித்தன் அவளை மீண்டும் அழைத்துச் சென்றான் என்ற கதையினுடாக விநாயகர் சஷ்டி விரதத்தின் மகிமை விபரிக்கப்பட்டுள்ளது.



பிள்ளையார் கதையில் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள், இதனால் கிடைக்கும் பயன்கள் என்பன கூறப்பட்டுள்ளன. அதாவது வீட்டில் இருந்து புறப்படும்போது, யுத்தம் புரியும் போது, வித்தியாரம்பம் செய்யும்போது, உத்தியோகம் செய்யும்போது ஆகிய சந்தர்ப்பங்களில் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளவேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரதத்தை அனுட்டிப்பதனால் ஏற்படும் பயன்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.அதாவது சந்ததி தளைக்கும், சம்பத்து உண்டாகும், நினைத்த பொருள் கிடைக்கும், கைகூடும், மேலவர்களை வென்றிடலாம் என்பனவாகும்.

**உ. நூற்பயன்**

பிள்ளையார் கதையினை படித்து முடிப்பவர்கள் அடையும் பயன்களும் இதன் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பொன் கிடைக்கும்,கல்வி அதிகமாகும், எல்லாப் பொருளும் செல்வமும் தேடிவரும். அத்தோடு இக்கதையைக் கற்றவர்கள் மட்டுமன்றி நோற்றவர்களுக்கும், நோராது அருகிலிருந்து கேட்டவர்களுக்கும் கேடுவராது. அவர்கள் பிள்ளைப்பாக்கியம் பெறுவர், நோய்களில் இருந்து விடுபடுவர். பிறப்புக்களில் நல்ல பெரும் செல்வம் பெற்று சிறந்து வாழ்வர்.

**வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த**
**பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி**
**நோற்றோர் மிகவாழ்வர் நோலாதருகிருந்து**
**கேட்டோர்க்கும் வராது கேடு**

என்றவாறு இந்நூலின் பயன் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பயிற்சிகள்

01. சுன்னாகம் வரதபண்டிதர் எழுதிய விரத நூல்கள் யாவை?
02. பிள்ளையார் கதையில் குறிப்பிடப்படும் கிளைக் கதைகள் யாவை?
03. விநாயகர் சஷ்டிவிரதத்தை அனுட்டித்தமையால் பயன்கள் பல பெற்றவர்கள் யாவர்.
04. இந்நூல் விநாயகரை எச்சந்தர்ப்பங்களில் வழிபடவேண்டும் எனக் குறிப் பிடுகின்றது.
05. பிள்ளையார் கதையினைப் படிப்பதனால் பெறும் பயன்கள் யாவை?

## செயற்பாடு

★ அட்டையொன்றில் விநாயகர் சஷ்டிவிரதத்தை அனுட்டிக்கும் ஒழுங்கு முறைகளைக் குறிப்பிட்டு அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

## பாடச்சுருக்கம்

★ நமது நாட்டில் தோன்றிய விரதம் பற்றிக் கூறும் நூல்களில் ஒன்றாக பிள்ளையார் கதை அமைகின்றது.
★ விநாயக விரதங்களின் சிறப்புக்களை அடியவர்களுக்கு இலகுவான முறையில் எடுத்துக் கூறுவது இதன் நோக்கமாகும்.
★ இதில் பல கிளைக் கதைகள் காணப்படுகின்றன.
★ இதில் விநாயக சஷ்டிவிரதத்தை அனுட்டித்தவர்கள் பெற்ற பயன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
★ இதன் இறுதிப்பகுதியில் இந்நூலைப் படித்தவர்கள் பெறும் பயன்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.